**செய்தி வெளியீடு எண்: 738** **நாள்: 15.10.2018**

## செய்தி வெளியீடு

பணியிடத்தில் விபத்தில்லா நிலை மற்றும் தொழில்வழி நோயில்லா உலகம் அமைய வேண்டும் என்ற நோக்கோடு விபத்தில்லா நோக்கு என்ற இரண்டு நாள் சர்வதேச கருத்தரங்கு சென்னை கிண்டியில் அக்டோபர் 15 மற்றும் 16 தேதிகளில் நடைபெற்றது.

DGUV, ஜெர்மனி என்ற அமைப்பானது தமிழ்நாடு அரசின் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்துடன் இணைந்து தொழிற்சாலைகள், கட்டுமானங்கள் மற்றும் சுரங்கங்களில் விபத்தில்லா நிலையை அடைய வேண்டும் என்ற நோக்கோடு இந்த சர்வதேச கருத்தரங்கு தமிழக அரசின் சீரிய முயற்சியால் சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர். நிலோபர் கபில் அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்க உரையாற்றினார். அதில் தொழிலாளர்களின் நலனை பாதுகாக்க தமிழ்நாடு அரசு எடுத்துள்ள பல்வேறு நலத்திட்டங்கள் குறித்தும் கட்டுமான தொழிலாளர்களுக்கு தமிழக அரசால் வழங்கப்படும் சலுகைகள் குறித்தும் விவரமாக எடுத்துரைத்தார்.

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் திரு. கா.மனோகரன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். மத்திய அரசின் DGFASLI ன் இயக்குநர் ஜெனரல் டாக்டர். அவ்நீஷ் சிங் அவர்கள் முக்கிய உரையாற்றினார்.

சர்வதேச சமூக பாதுகாப்பு அமைப்பின் தலைவர் பேராசிரியர் H.C.கார்ல் ஹெயின்ஸ் நோய்ட்டல் அவர்கள் இக்கருத்தரங்கின் முக்கிய அம்சங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

இண்டோ - ஜெர்மன் போக்கல் பாயின்டின் இந்திய இயக்குநர் திரு. பிமால் கந்தி சாகு அவர்கள் நன்றி உரையாற்றினார்.

ஜெர்மன் தூதரக சமூக மற்றும் தொழிலாளர் நல தலைவர் திரு.டிமோதியஸ் பெல்டர் ரூஸ்டி அவர்கள் தலைமை உரையாற்றினார்.

இக்கருத்தரங்கில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் மற்றும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்கள் பாதுகாப்பு மலரை வெளியிட்டனர்.

தமிழ்நாடு அரசு, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு.சுனில் பாலிவால் அவர்கள் தலைமை உரையாற்ற உள்ளார்.

இக்கருத்தரங்கில் மத்திய அரசின் DGFASLI ன் இயக்குநர் ஜெனரல் டாக்டர். அவ்நீஷ் சிங்,, துணை இயக்குநர் ஜெனரல், டாக்டர். R.K.இளங்கோவன், கேரள தலைமை தொழிற்சாலைகள் இயக்குநர், திரு.P.பிரமோத் மற்றும் ஜெர்மனி மற்றும் மத்திய அரசின் பல்வேறு துறைகளின் பாதுகாப்பு வல்லுநர்கள் சர்வதேச அளவில் தொழிற்சாலைகள், கட்டுமானங்கள் மற்றும் சுரங்கங்களில் கையாளப்படும் சிறந்த பாதுகாப்பு வழிமுறைகள் குறித்த தங்களது உயரிய கருத்துகளை பகிர்ந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கில் ஜெர்மனி நாட்டின் அமைப்புகளான DGUV, ISSA, BG-BAU, மத்திய மற்றும் மாநில அரசுகளின் உயர் அலுவலர்கள், கேரள மற்றும் ஒடிசா மாநிலங்களின் தலைமை தொழிற்சாலைகள் ஆய்வாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கின் மூலம் தொழிற்சாலைகள், கட்டுமானங்கள் மற்றும் சுரங்கங்களில் பாதுகாப்பு துறையில் ஈடுபட்டுள்ள சுமார் 300 அலுவலர்கள் பயனடைந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**